முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் பராசரிஷி அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

03.10.2018, புதன்கிழமை

1. **ஞானத்தின் உயர் சூட்சும குருவே**
**ஞானபண்டிதனால் ஆட்கொள்ளப்பட்டு**
**ஞானயுகம் படைக்க வேண்டியே**
**ஞானிகளை வணங்கி மக்கள் உயர**

2. உயர் பூசை செய்யும் அரங்கனே
உன் வழி உண்மை வழி ஏற்பவர்கள்
உயர்ந்து ஞானவான்களாவர் எனக் கூறி
உலகத்தில் ஒளி சூட்சும நூலை

3. நூலை **விளம்பி தரிவை திங்கள்**
**நிலமதனில் மூவையீர் திகதி புந்திவாரம்**
**(விளம்பி வருடம் புரட்டாசி மாதம் 17ம் நாள் 03.10.2018, புதன்கிழமை)**
**ஞாலமதில் பராசரிஷி யானும்**
நாட்டிடுவேன் உலகோர் நலம் பெற

4. நலம் தர நல்ல யுகவாழ்வு தர
ஞானிகளே போற்றும் அரங்கன்
பலம் பெற ஏழாம் படை வீடான
பாடிடுவேன் துறையூர் மண்ணுக்கு

5. மண்ணுக்கு மக்களெல்லாம் வந்து
மகத்துவம் உணர்ந்து நன்கு
அண்ணலான அரங்கன் திருவடி
அருள் தீட்சை அடைதல் கண்டு

6. கண்டுமே நித்ய தருமமாக
கந்தவேலன் நடத்தி வருகின்ற
தொண்டுமிக்க அன்னதானமதில்
தெரிவிப்பேன் உலகோர் விரும்பி

7. விரும்பி ஏக தின பங்களிப்பாய்
வினவிட செலவுதனை ஈந்து
விரும்பி தொண்டும் செய்து
வினை ஒழியும் பிறவிப் பயன் கிட்டும்

8. கிட்டுமே கலியுகம் மாற்றுகின்ற
கேட்டிடுவாய் தருமசக்தி பெருக
தட்டாது உலகோரெல்லாம் தொடர
தருமபலம் பெருகப் பெருகவே

9. பெருகவே தருமயுகம் ஆகி
பிரச்சினைகள் நிறைந்த கலி விலகும்
ஆறுமுகன் சீடர்கள் என
ஆன்மீக ஞான பலம் கூடிட

10. கூடிடவே குளறுபடியானச் சூழல்
குற்றம் மிகுந்த சமூகக் கேடுகள்
ஓடியே சமூக உயர் மாற்றங்கள்
உலகம் எங்கும் சமம் என்கின்ற

11. என்கின்ற பெருநிலை உருவாகி
ஏழாம் படை வீட்டு சக்தி வெளிப்பாடாகி
சண்முகனார் ஆட்சி மலரும்
சாற்றி வந்த ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

## முருகப்பெருமான் துணை

**மகான் பராசரிஷி அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

கலிகாலத்தில் வந்துதித்திட்ட ஞானத்தின் உயர் சூட்சும ஞானகுருவே ஞானபண்டிதன் முருகப்பெருமானால் ஆட்கொள்ளப்பட்ட ஞானதேசிகனே அரங்கனே. ஞானயுகம் படைத்திட வேண்டியே ஞானிகளை வணங்கி மக்கள் உயர்வான நிலையை அடைந்திட உயர்ஞான பூஜைகள் செய்கின்ற அரங்கமகாதேசிகனே தாம் கூறும் தூயநெறியான உண்மை ஞானவழிதனை உள்ளன்போடு நம்பிக்கையோடு ஏற்றுக் கொள்பவர்கள் எல்லாம் ஞானத்தில் உயர்வடைந்து ஞானவான்களாக ஆகிடுவார்கள் எனக் கூறியே உலகமெலாம் உமது புகழ் கூறியே உலக நலம் கருதியே **விளம்பி வருடம் புரட்டாசி மாதம் 17ம் நாள் 03.10.2018, புதன்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே பராசரிஷி யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் பராசரிஷி.

உலக மக்களுக்கு எல்லா நலங்களையும் அரங்கன் தந்தருளவும், உலகினர்க்கு நல்ல யுகமான ஞானயுக வாழ்வை தந்திடவும் ஞானிகள் போற்றும் அரங்கமகாதேசிகனார் பலம் பெற வேண்டும், உலகம் தரும பலம் பெற வேண்டும்.

உலகம் தரும பலம் பெற வேண்டுமாயின் உலக மக்களே நீங்களெல்லாம் உத்தம மகா ஞானசபையாம் ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலிற்கு வருகை தந்து அரங்கன் மகத்துவத்தையும் ஓங்காரக்குடிலின் மகத்துவத்தையும் உணர்ந்து, அண்ணல் ஆறுமுக அரங்கமகா தேசிகனார் தம் திருவடிகளை பயபக்தியுடன் வணங்கி தீட்சை உபதேசங்களை அடைந்து ஆறுமுக அரங்கன் உலக நலம் பெற நடத்துகின்ற நித்திய தருமங்களானதும் முருகப்பெருமான் தலைமையேற்று நடத்துகின்றதுமான தொண்டுபலமும், புண்ணியபலமும், அருள்பலமும்மிக்க அன்னதானப் பணிகளில் உலக மக்களெல்லாம் மனம் விரும்பி பொருளுதவிகள் செய்வதுடன் தொண்டுகள் செய்தும் வருவதுடன் ஒரு நாள் அன்னதான செலவினை ஏற்று பொருளுதவியும் தொண்டும் செய்திட அவர்களின் வினைப்பயன்கள் எல்லாம் ஒழியும், அவர்கள் பிறவி எடுத்ததின் பிறவிப் பயனும் கிட்டும்.

உலகோர் அரங்கன் ஆற்றும் அன்னதான பணிகளில் பங்கு கொள்ள கலியுகத்தினை மாற்றுகின்ற தருமசக்தி பெருகிடும். உலகினில் உள்ளோர் அரங்கன் தருமப்பணிகளில் அதிக அளவு பங்கு கொள்ள கொள்ள, உலகின் தரும பலன் அதிகமாகி தருமபலம் பெருகிட பெருகிட

இவ்வுலகம் தரும உலகமாக ஆகிடும். உலகினைப் பற்றியுள்ள கலியுகத்தின் கொடுமைகள் அதனால் வருகின்ற பிரச்சனைகளும் மாயையும் விலகிடும்.

உலகினில் உள்ள மக்கள் ஆறுமுக அரங்கன் திருவடி பணிந்து அரங்கன் அன்பிற்கு பாத்திரமாகி அரங்கனின் சீடர்களாக ஆகிட அரங்கனின் சீடர்கள் உலகினில் பெருகிட உலகினில் ஞானபலம் கூடிடும். ஞானபலம் மிக்க அரங்கனின் சீடர்கள் பெருகிட பெருகிட உலகினில் உள்ள குளறுபடியான சூழல் மாறிடும், குற்றம் மிகுந்த சமூக சீர்கேடுகள் எல்லாம் மாற்றப்படும். சமூகத்தில் உள்ள குறைகள் களையப்பட்டு சமூக உயர் மாற்றங்கள் உருவாகும். உலகமெங்கும் நிலவுகின்ற பேதாபேதங்கள் மறைந்து உலகமெங்கும் சமம் எனும் பெருநிலையான பொதுநிலை உருவாகிடும். உலகினில் ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலின் சக்தி வெளிப்பட்டு அரங்கனின் ஆற்றல் உலகமெங்கும் பரவி அருள்பலம் பரவி உலகினில் முருகப்பெருமானின் ஞானஆட்சி விரைந்து உருவாகிடும் என உலகறிய உரைக்கின்றார் மகான் பராசரிஷி.

–சுபம்–